## தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் கலைப் பண்பாட்டுத்துறை சார்பில் நடத்திய பல்வேறு போட்டிகளில்

## காளிப்பட்டி மஹேந்ரா கலை அறிவியற் கல்லூரி (தன்னாட்சி)

## மாணவர்கள் மாவட்ட அளவில் சாதனை

---

தமிழ்நாடு 50 பொன்விழா ஆண்டை முன்னிட்டு தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் கலைப் பண்பாட்டுத்துறை சார்பில் நடத்திய பல்வேறு போட்டிகளில் நாமக்கல் மாவட்டம் காளிப்பட்டி மஹேந்ரா கலை அறிவியற் கல்லூரி (தன்னாட்சி) மாணவர்கள் மாவட்ட அளவில் சாதனைப் படைத்தனர். தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய கவிதைப் போட்டியில் பூ.பாலமுருகன், (இளங்கலை மூன்றாமாண்டு ஆங்கில இலக்கியம்) முதற்பரிசு ரொக்கம் ரூ5000, மற்றும் தமிழ்நாடு அரசு கலைப் பண்பாட்டுத்துறை மாவட்ட அளவில் நடத்திய தனிநபர் கிராமிய நடனப்போட்டியில் செ.சூர்யபிராகாஷ் (இளங்கலை முதலாமாண்டு தமிழிலக்கியம்) முதற்பரிசு ரொக்கம் ரூ 5000, தமிழிசைப் போட்டியில் ஜெ.சேக்கிழார் (இளங்கலை முதலாமாண்டு தமிழிலக்கியம்) மூன்றாம் பரிசு ரொக்கம் ரூ 2000 பெற்று மாவட்ட அளவில் சாதனைப் படைத்தனர். வெற்றி பெற்ற மாணவர்களைக் கல்லூரியின் தாளாளர் திரு. எம்.ஜி.பாரத்குமார் அவர்கள், இயக்குநர் நா.சம்பத்குமார் அவர்கள், முதல்வர் முனைவர் சு.அர்ச்சுனன் அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் இரா.சுந்தரமூர்த்தி, பேராசியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டித் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டனர்.